## அ. சரியான சொல்லைத் தெரிவு செய்க.

1. வனப்பு - இச்சொல்லின் பொருள் ________.

அ) அறிவு ஆ) பொறுமை
இ) அழகு ஈ) சினம்

2. 'நன்றென்றல்' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) நன் + றென்றல் ஆ) நன்று + என்றல்
இ) நன்றே + என்றல் ஈ) நன்றெ + என்றல்

3. என்று + உரைத்தல் - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ________.

அ) என்றுஉரைத்தல் ஆ) என்றுயுரைத்தல்
இ) என்றஉரைத்தல் ஈ) என்றுரைத்தல்

4. கண்ணுக்கு அழகு ________.

அ) வெறுப்பு ஆ) பொறுமை
இ) இரக்கம் ஈ) பொறாமை

5. சிறுபஞ்சமூலம் ________ நூல்களுள் ஒன்று.

அ) பதினெண்மேல்கணக்கு ஆ) பதினெண்கீழ்க்கணக்கு
இ) காப்பிய ஈ) சிற்றிலக்கிய

6. சிறுபஞ்சமூலம் நூலின் ஆசிரியர் ________.

அ) விளம்பினாகனார் ஆ) ஔவையார்
இ) நல்லந்துவனார் ஈ) காரியாசான்

7. பொற்காசு - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) பொற் + காசு ஆ) பொல் + காசு
இ) பொன் + காசு ஈ) பொ + காசு

8. கொடைத்திறம் - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ) கொடை + திறம் ஆ) கோடை + திறம்
இ) கொட + திறம் ஈ) கொடு + திறம்

9. 'களிறு' என்பது ________ யைக் குறிக்கும்.

அ) குதிரை ஆ) கழுதை
இ) யானை ஈ) ஒட்டகம்

10. தரணி - இச்சொல்லின் பொருள் ________.

அ) மலை ஆ) உலகம்
இ) காடு ஈ) வானம்

LIVEWORKSHEETS